(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 387.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 ஒகத்து 21, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2687/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது களணிப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் கல்விசார் பணியாட்டொகுதி அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக் கழகத்துக்குரிய பீடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பீடங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டுக்காக களணிப் பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் மொத்தப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) ஒதுக்கப்பட்ட மேற்படி நிதி ஏற்பாடுகள் குறிப்பிட்ட கால எல்லையினுள் மேற்படி பல்கலைக்கழகத்தின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு போதுமானதா என்பதையும்;

(iii) களணிப் பல்கலைக்கழகத்துக்குரியதாக திருப்தியடையக்கூடிய அளவு பௌதீக மற்றும் மனித வளங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3302/12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2010, 2011, 2012, 2013 ஆம் ஆண்டுகளில் மற்றும் இற்றைவரையிலும் வீரவில விமானநிலையத்தின் நிர்மாணப் பணிக்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாகவும்;

(ii) மேற்கூறப்பட்ட கருத்திட்டம் மேலும் நடைமுறைப்படுத்தப்படுமாவென்பதையும்;

(iii) இல்லையெனில், இக்கருத்திட்டத்தை இடைநிறுத்தியமைக்கான காரணங்களையும்;

(iv) மேற்கூறப்பட்ட கருத்திட்டத்தைக் கைவிட்டதன் விளைவாக இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பையும்;

(v) மேற்கூறப்பட்ட இழப்பிற்கு பொறுப்பான நபர் அல்லது நபர்களின் பெயர்களையும்;

(vi) அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3908/ '13

3.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தின் ஜா-எல நகரை அடுத்துள்ள தண்டுகம பிரதேசத்தில் கொண்டு நடத்தப்படும் விலங்குச் சாலைகளினதும் விலங்குகளை அறுக்கும் இடங்களினதும் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசத்தில் நிதமும் குவிக்கப்படும் உயிர் கழிவுகளை அப்புறப்படுத்துவது தொடர்பில் நடைமுறையில் உள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கழிவுகள் தொடர்பில் ஏதேனும் சுற்றாடல் மற்றும் சுகாதார பேணல் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிபாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3958/ '13

4.

கௌரவ புத்திக பதிரண,— வன சீவராசிகள், வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் யானை – மனித மோதல் காரணமாக வருடாந்தம் பெருமளவு மனித உயிர்கள் இழக்கப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அவ்வாறு இழக்கப்பட்டுள்ள மனித உயிர்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதிக்குள் யானை – மனித மோதல்கள் காரணமாக அழிவடைந்துள்ள மனித உயிர்கள் மற்றும் சொத்துக்களுக்காக செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாத்தறை மிதிகம அரச வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற மருத்துவர் சரத் விமலசூரிய யானை – மனித மோதலுக்கான தீர்வொன்றாக மின்சார வேலியொன்றை உருவாக்கியுள்ளார் என்பதையும்;

(ii) இந்த உபகரணத்தை பரிசோதனை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்காக வனசீவராசிகள் அலுவலர்கள் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதையும்;

(iii) அது இன்றுவரை திருப்பிக் கிடைக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மருத்துவர் சரத் விமலசூரிய குறைந்த செலவில் உருவாக்கியுள்ள மின்சார வேலியை பரிசோதனை செய்து அதனை யானை – மனித மோதலுக்கான தீர்வொன்றாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4465/ '13

5.

கௌரவ அனுர திஸாநாயக்க,— சிவில் விமானச்சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வ/ப மிஹின் லங்கா (தனியார்) கம்பனி 2010/2011 ஆம் ஆண்டில் பெற்ற தேறிய நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த ஆண்டின் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வை மேற்கொண்ட பட்டயக் கணக்காய்வாளர்களான 'பிரய்ஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ்' நிறுவனம் மிஹின் லங்கா கம்பனியின் இருப்பு தொடர்பானதொரு கருத்தை முன்வைத்துள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்நிறுவனம் முன்வைத்துள்ள கருத்தில் 'ஒரு வருடத்தில் மிஹின் லங்கா கம்பனி ரூபா 940.49 மில்லியன் நட்டத்தைக் காட்டியுள்ளதுடன், நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 1,083.92 மில்லியனால் நடைமுறைச் சொத்துக்களைத் தாண்டிச் சென்று ருபா 3,814.45 மில்லியன் எதிர் மறையான தேறிய பெறுமானத்தைக் காட்டுவதன் மூலம் கம்பனியை இயங்கும் நிலையிலான தொழில் முயற்சியொன்றாக தொடர்ந்தும் கொண்டு நடாத்துவதற்கான ஆற்றல் தொடர்பில் சந்தேகமான நிலையை காட்டுகிறது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இந்நிலைமையில் வ/ப மிஹின் லங்கா (தனியார்) கம்பனியைத் தொடர்ந்தும் கொண்டு நடாத்துவதற்கு பொதுமக்களின் பணத்தை ஈடுபடுத்துவது பயனற்றதென்பதை அரசு ஏற்றுக்கொள்கிறதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4527/ '13

6.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையினுள் உடல் பிடித்துவிடும் நிலையங்களை நடாத்திச் செல்வதற்கு சுதேச மருத்துவ அமைச்சினால் சட்டரீதியான அனுமதி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அனுமதியின் கீழ் தற்போது மாவட்ட மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள உடல் பிடித்துவிடும் நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) இவ்வாறு தாபிக்கப்பட்டுள்ள உடல் பிடித்துவிடும் நிலையங்களை நடாத்திச் செல்கின்றபோது பின்பற்ற வேண்டிய சட்டவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4622/ '13

7.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை அனல் மின் நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம், அம்பாந்தோட்டை விமான நிலையம், அம்பாந்தோட்டை (சூரியவெவ) கிரிக்கட் மைதானம், திருகோணமலை மின் உற்பத்தி நிலையம், சம்பூர் மின் உற்பத்தி நிலையம் ஆகியவற்றின் நிர்மாணிப்புகளுக்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கேள்விபத்திரம் கோரப்படாது மேற்படி கருத்திட்டங்களுக்குரிய நிர்மாணிப்புகள் வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்படுகின்றபோது பாரியளவு தரகுத்தொகை பெற்றுக்கொள்ளல் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) சீனாவின் கடன் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் மேற்படி சகல கருத்திட்டங்களுக்குமான கடன் தொடர்பாக உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ள சராசரி வட்டி வீதம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4633/ '13

8.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் முதலாவது HIV தொற்றுக்கு ஆளானவர் கண்டுபிடிக்கப்பட்ட வருடத்தை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட திகதி முதல் இற்றைவரை HIV தொற்றியவர்களின் வருடாந்த வளர்ச்சியையும்;

(ii) HIV தொற்றியவர்களின் வருடாந்த வளர்ச்சி மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாகவும்;

(iii) HIV தொற்றுக்குக் காரணமான பிரதானமான காரணிகளையும்;

(iv) இக்காரணிகளைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) HIV தொற்றியவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) HIV தொற்றிய ஒரு தாயின் வயிற்றிலுள்ள சிசுவுக்கு HIV தொற்றாமல் தடுப்பதற்கான வழிமுறைகள் உள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவை யாவையென்பதையும்;

(iii) இந்நோய் இலங்கையில் பரவுவதற்கான பிரதானமான காரணிகள் யாவை என்பதையும்

(iv) HIV பரவுவதைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

4760/ '14

9.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,—கால்நடை வளர்ப்பு, கிராமிய சன சமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையை பால் உற்பத்தியில் தன்னிறைவு காணச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) திரவப் பாலின் மூலம் பால் மா உற்பத்தி செய்வதற்காக தாபிக்கப்பட்ட நிறுவனம் யாது என்பதையும்;

(iii) இந் நிறுவனத்தின் உற்பத்தி இயலளவை மேம்படுத்துவதற்காக ஏதேனும் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4906/ '14

10.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஜனவரி மாதமளவில் ஓய்வூதியத் திணைக்களத்தில் ஓய்வூதிய பணிக்கொடை பெற்றுக் கொள்வதற்காக காத்திருந்த ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களுக்கு ஓய்வூதிய பணிக்கொடையைச் செலுத்துவதில் ஏதேனும் தாமதம் காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு பணிக்கொடை முற்பணம் செலுத்துவதற்காக வருடாந்தம் பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்படுகின்ற பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஓய்வூதிய சுற்றறிக்கை 2/2014 இற்கு அமைய இதுவரை ஓய்வூதியத் திணைக்களத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஓய்வூதியப் பணிக்கொடை முற்பணத்தை எதிர்காலத்தில் வங்கிகளின் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4957/ '14

11.

கௌரவ நிரோஷன் பெரேரா,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் பிரதேசத்தில் தற்போது செயற்படும் பதிவு செய்யப்பட்ட உப்பளங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இந்த உப்பளங்களின் மூலம் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் உப்பின் அளவு எத்தனை மெட்ரிக் தொன் என்பதையும்;

(iii) புத்தளம் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பு, தேசிய உப்புத் தேவையில் எத்தனை சதவீதத்தைப் பூர்த்தி செய்கின்றது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உப்பு உற்பத்தி நிறுவனங்களுக்கு அரச காணிகள் ஏதேனுமொரு அரச கொள்கையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இக்காணிகள் வழங்கப்பட்டுள்ள கம்பனிகள், ஒவ்வொரு கம்பனிக்கும் வழங்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு மற்றும் இக்காணிகளுக்கான அரச விலை மதிப்பீட்டுப் பெறுமதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அரச காணிகள் உப்பு உற்பத்திக்காக வழங்கப்படுகையில் ஒரு சில கம்பனிகளுக்கு விசேட சிறப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5027/ '14

12.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது உள்நாட்டுச் சந்தையில் சந்தைப்படுத்தப்படும் தெம்பூட்டும் பானங்கள் (Energy Drinks) வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பானங்களிடையே காணப்படுகின்ற உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பானங்கள் வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தெம்பூட்டும் பானங்களின் தரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பினைத் தீர்மானிக்கும் பிரமாணங்கள் யாவை என்பதையும்;

(iv) 2014 ஆம் ஆண்டினுள் தெம்பூட்டும் பானங்கள் தொடர்பில் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2688 / '12

13.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது றுஹுணு பல்கலைக்கழகத்தில கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் சேவையாற்றுகின்ற கல்விசார் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டுக்காக றுஹுணு பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் மொத்தப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக் கழகத்தின் மூலமாக மாணவர்களுக்கு உயர் தரத்திலான கல்வியை பெற்றுக் கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மேற்படி நிதி ஏற்பாடுகள் போதுமானதாயுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி பல்கலைக்கழகத்தின் கல்விசார் பணியாட்டொகுதியினருக்கு நியாயமான சம்பளம் வழங்கப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3304/ '12

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1960 முதல் 2000 வரையிலான ஒவ்வொரு தசாப்தங்களிலும், 2000 முதல் 2012 வரையிலும், மற்றும் இற்றை வரையிலும் கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, பேராதனை, மொறட்டுவ, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களுக்காக பெறப்பட்ட சர்வதேச தரப்படுத்தல் என்னவென்பதை தனித்தனியாக இச்சபையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பல்கலைக்கழகங்களுக்காக வெளிநாட்டு விரிவுரையாளர்கள் பரஸ்பர பரிமாற்றல் அடிப்படையிலா ஆட்சேர்க்கப்பட்டனர் என்பதையும்;

(ii) அவ்வாறெனில், கடந்த இரண்டு வருடங்களில் அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட திகதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் ஆகியன யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) கடந்த 5 வருடங்களாக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலுமுள்ள பீடம் ஒன்றுக்கான செலவினத்தையும் மற்றும் மாணவர் ஒருவருக்கான செலவினத்தையும் வருடாந்த அடிப்படையில் எவ்வளவு என்பதையும்;

(ii) அன்றுள்ளவாறு, விடுதிகளைப் பெற்றுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்;

(iii) குறிப்பிடப்பட்ட வசதிகள் இலவசமாகவா அல்லது கொடுப்பனவின் அடிப்படையிலா வழங்கப்படுகின்றன என்பதையும்

(iv) விடுதி வசதிகளை வழங்குவதற்காக மாணவர்களை தெரிவு செய்யும் பொருட்டு பயன்படுத்தப்படும் தகவு திறன்கள் எவை என்பதையும்

(v) விடுதி வசதிகள் இல்லாத மாணவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்று ஏற்பாடுகள் எவை என்பதையும்;

(vi) சகல மாணவர்களுக்கும் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நீண்டகால உபாயங்கள் என்னவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4571/ '13

15.

கௌரவ அனுர திசாநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரையான காலப் பகுதியினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான ஒவ்வொரு துறைமுகத்துக்கும் வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கையும் பரிமாற்றப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு துறைமுகத்தினதும் தொழிற்பாட்டு இலாபம் அல்லது நட்டம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கை துறைமுக அதிகாரசபை ஒட்டுமொத்தமாக மேற்படி காலப்பகுதியில் பெற்ற வருமானம் மற்றும் இலாபம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## **பிரேரணை முன்னறிவித்தல்கள்**

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 2.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 11.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

தொழிநுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

13.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

ஜயந்திபுர நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

மெத் சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

ஸ்ரீ லங்கா கமநல நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

ஜயரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

ஜம்மிய்யத்துல் ஸஹ்வா அல் - கைரிய்யா (ஜஸ்கா) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

எம்.கே.ஏ.டீ.எஸ். குணவர்தன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.